## பாடம் - 9

## ராத்திப் - வழமையான சுன்னத்துகள்

## الدرس التاسع

## السنن الرواتب

ஊரில் இருக்கும்போது 12 ரக்அத்துகள் சுன்னத்தான தொழுகைகளைப் பேணித் தொழுவது முஸ்லிமான ஆண், பெண் ஒவ்வொருவருக்கும் விரும்பத் தக்கதாகும். அவை: லுஹருக்கு முன் நான்கு ரக்அத், லுஹருக்குப் பின் இரண்டு ரக்அத், மஃரிபுக்குப் பின் இரண்டு ரக்அத், இஷாவுக்குப் பின் இரண்டு ரக்அத், சுபுஹுக்கு முன் இரண்டு ரக்அத். ஏனெனில் நபி (ஸல்) கூறினார்கள்:

عَنْ أُمِّ حَبِيبَةَ زَوْجِ النَّبِيِّ ﷺ أَنَّهَا قَالَتْ سَمِعْتُ رَسُولَ الله ﷺ يَقُولُ مَا مِنْ عَبْدٍ مُسْلِمٍ يُصَلِّي لله كُلَّ يَوْمٍ ثِنْتَيْ عَشْرَةَ رَكْعَةً تَطَوُّعًا غَيْرَ فَرِيضَةٍ إِلَّا بَنَى الله لَهُ بَيْتًا فِي الجَنَّةِ أَوْ إِلَّا بُنِيَ لَهُ بَيْتٌ فِي الجَنَّةِ) – رواه المسلم :٧٢٨

'ஒரு முஸ்லிமான அடியான் ஒரு நாளைக்கு உபரியாக பன்னிரண்டு ரக்அத் அல்லாஹ்வுக்காகத் தொழுதால் அல்லாஹ் அவனுக்காக சொர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டுவான்.' அறிவிப்பவர்: உம்மு ஹபீபா(ரலி), நூல்: முஸ்லிம்-728,

பொதுவாக நபில் தொழுகைகளையும் ராத்திப் சுன்னத்களையும் ஒரு முஸ்லிம் தனது வீட்டில் நிறை வேற்றுவதே சிறந்ததாகும். ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:

عَنْ جَابِرٍقَالَ قَالَ رَسُولُ الله ﷺ : إِذَا قَضَى أَحَدُكُمْ الصَّلَاةَ فِي مَسْجِدِهِ فَلْيَجْعَلْ لِبَيْتِهِ نَصِيبًا مِنْ صَلَاتِهِ فَإِنَّ الله جَاعِلٌ فِي بَيْتِهِ مِنْ صَلَاتِهِ خَيْرًا) – رواه مسلم : ٧٧٨وعَنْ زَيْدِ بْنِ ثَابِتٍ عن النبي ﷺ ... فَإِنَّ خَيْرَ صَلَاةِ المَرْءِ فِي بَيْتِهِ إِلَّا الصَّلَاةَ المَكْتُوبَةَ) –متفق عليه: ٧٨١, ٦١١٣

'...ஏனெனில் ஒரு மனிதன் தொழும் தொழுகையில் சிறந்தது தனது வீட்டில் தொழுவதாகும். கடமையான தொழுகையைத் தவிர' என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறிள்ளார்கள். நூல்: புகாரி(6113), முஸ்லிம்(781)

### வித்ரு தொழுகை

வித்ரு தொழுகையை நிறைவேற்றுவது ஒரு முஸ்லிமுக்கு வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். இதன் நேரம் இஷா தொழுகைக்குப் பிறகிலிருந்து பஜ்ரு உதய மாகும் வரையாகும். இரவின் பின்னேரத்தில் எழுந்து தொழ முடியும் என்ற உறுதியுள்ளவனுக்கு அந்த நேரத்தில் தொழுவதே சிறப்பானது. இந்த வித்ரு தொழுகை நபி (ஸல்) அவர்கள்- பயணத்திலும் சரி, ஊரிலும் சரி- விடாமல் தொழுது வந்த சுன்னத்தான தொழுகைளில் உள்ளவையாகும். வித்ரு தொழுகையில் மிகக் குறைந்தது ஒரு ரக்அத் தொழுவதாகும். நபி(ஸல்) அவர்கள் இரவில் பதினோரு ரக்அத் தொழுதுள்ளார்கள்.

عَنْ عَائِشَةَ رضي الله عنها: أَنَّ رَسُولَ الله ﷺ كَانَ يُصَلِّي بِاللَّيْلِ إِحْدَى عَشْرَةَ رَكْعَةً يُوتِرُ مِنْهَا بِوَاحِدَةٍ)... (رواه مسلم:٧٣٦)

ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: 'நபி(ஸல்) அவர்கள் இரவில் கக ரக்அத் தொழுவார்கள். அவற்றில் ஒரு ரக்அத்தை வித்ராகத் தொழுவார்கள்.' (முஸ்லிம்-736) இரவுத் தொழுகையை இரண்டிரண்டாகத் தொழ வேண்டும்.

عَنْ ابْنِ عُمَرَ رضي الله عنه أَنَّ رَجُلًا سَأَلَ رَسُولَ الله ﷺ عَنْ صَلَاةِ اللَّيْلِ فَقَالَ رَسُولُ الله ﷺ: صَلَاةُ اللَّيْلِ مَثْنَى مَثْنَى، فَإِذَا خَشِيَ أَحَدُكُمْ الصُّبْحَ صَلَّى رَكْعَةً وَاحِدَةً تُوتِرُ لَهُ مَا قَدْ صَلَّى) –رواه مسلم:٧٣٦

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் இரவுத் தொழுகை பற்றிக் கேட்டார். அதற்கவர்கள், 'இரவுத் தொழுகை இரண்டிரண்டாகத் தொழ வேண்டும். சுப்ஹு வந்துவிடும் என்று அஞ்சினால் ஒரு ரக்அத் தொழுளு நீ தொழுதவற்றை அது ஒற்றையாக்கிவிடும்.' என பதிலளித்தார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: முஸ்லிம்(749)

சில சமயம் வித்ரு தொழுகையில் ருகூவுக்குப் பிறகு குனூத் ஓதுவது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ஹஸன் பின் அலீ (ரலி) அவர்களுக்கு வித்ருடைய குனூதில் ஓதுவதற்காக சில வார்த்தைகளைக் கற்றுக் கொடுத்ததாக ஹஸன் பின் அலீ(ரலி) அவர்களே அறிவிக்கக்கூடிய ஒரு நபிமொழி உள்ளது. ஆனாலும் இவ்வாறு செய்வதை வழக்கமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. ஏனெனில் நபி(ஸல்)அவர்களின் தொழுகையை நமக்குச் சொன்ன பெரும்பாலான நபித்தோழர்கள் அவர்கள் வித்ரில் குனூத் ஓதியதை நமக்குக் குறிப்பிடவில்லை.

ஒருவருக்கு இரவுத் தொழுகை தவறிவிட்டால் அதனை பகலில் இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து. பன்னிரண்டு என இரட்டைப்படையாகக் கழாச் செய்வது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் நபி(ஸல்)அவ்வாறு செய்துள்ளார்கள்.